بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# பெருமானாரின் வரலாற்றில் 100 ஏடுகள்

**1.** பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஒருவர் உணவருந்திக் கொண்டிருந்தார். அவர் உணவருந்த ஆரம்பிக்கு முன் “பிஸ்மில்லாஹ்” சொல்லவில்லை. உணவருந்தி முடியும் சமயம் “ பிஸ்மில்லாஹி அவ்வலஹூ வ ஆகிரஹூ” என்று ஆரம்பத்திற்கும் முடிவிற்கும் சேர்த்து பிஸ்மில்லாஹ் சொன்னார். இதனைப் பார்த்த பெருமானார் (ஸல்) அவர்கள் “இதுவரை இந்த மனிதருடன் ஷைத்தானும் உணவருந்திக் கொண்டிருந்தான். இறுதியில் “பிஸ்மில்லாஹ்” சொன்னதும் ஷைத்தான் தான் உண்டதை எல்லாம் கக்கிவிட்டு எழுந்து ஓடி விட்டான்” என்று புன்சிரிப்புடன் சொன்னார்கள்.

**நீதி : எச்செயலை ஆரம்பிக்கும்போதும் பிஸ்மில்லாஹ் சொல்ல வேண்டும்.**

**2.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் சில தோழர்கள் “நபியே! மனிதர்களில் சிறந்தவர் யார்?” எனக் கேட்டார்கள். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் “தீமையை விட்டு விலகி நன்மையை செய்து அதுபோல் மற்றவர்களுக்கும் நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பவர் எவரோ அவரே மனிதர்களில் மிகச் சிறந்தவர்” எனக் கூறினார்கள்.

**நீதி : நன்மையை ஏவித் தீமையைத் தடுக்க வேண்டும்.**

**3.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் “ நற்செயல்களில் அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமானது எது?” என்று கேட்கப்பட்டது. “தொழுகைகளை அதற்குரிய நேரத்தில் தொழுவது” என்று கூறினார்கள். “பின்பு எது?” என்று

கேட்கப்பட்டது. "பெற்றோரைப் பேணி நடப்பது" என்று கூறினார்கள். 'அதற்கு பின் எது?' என்று கேட்கப்பட்டது. "அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்வது" என்று கூறினார்கள்.

**நீதி : தொழுகைகளை அதற்குரிய நேரங்களில் தொழுதல் வேண்டும்.**

**4.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் "உங்களில் ஒருவர் வீட்டின் எதிரே ஒரு ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. அதில் அவர் ஒரு நாளைக்கு ஐந்து தடவை குளிப்பாராயின் அவர் உடலில் அழுக்கு இருக்குமா?" என்று கேட்டார்கள். அதற்கு நாயகத் தோழர்கள் "கொஞ்சமும் உடம்பில் அழுக்கு இருக்காது" என்று பதிலளித்தார்கள். "இவ்வாறுதான் ஐங்காலத் தொழுகைகளும். ஒருவர் ஒரு நாளைக்கு ஐந்து நேரம் தொழுதால் அவற்றின் மூலம் இறைவன் அவரிடம் உள்ள பாவங்கள் அனைத்தையும் அழித்து விடுகின்றான்" என்று சொன்னார்கள்.

**நீதி : ஐந்து நேரம் தொழுவதால் எல்லா பாவங்களும் அழிந்து விடுகின்றன.**

**5.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தமது தோழர்களிடம் தொழுகையைப் பற்றி கூறிக் கொண்டிருக்கும் போது யார் தொழுகையைப் பேணி நடக்கின்றாரோ அவருக்கு ஒரு பிரகாசமும், இறைவனிடம் ஓர் ஆதாரமும், மறுமை நாளில் வெற்றியும் கிடைக்கும். யார் தொழுகையைப் பேணி நடக்கவில்லையோ அவருக்கு பிரகாசமும் கிடைக்காது. இறைவனின் ஆதாரமும் கிடைக்காது, மறுமை நாளில் வெற்றியும் கிடைக்காது. அவனை மறுமை நாளில் இறைவனின் எதிரிகளான "பிர்அவ்ன், காரூன், ஹாமான்" போன்ற பெரும் பாவிகளுடன் சேர்த்து எழுப்பப்படும் என்று சொன்னார்கள்.

**நீதி : தொழுகைகளைப் பேணித் தொழ வேண்டும்.**



**6.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு தடவை இலையுதிர் காலத்தின்போது அபூதர் என்ற தமது தோழருடன் வெளியே சென்று கொண்டிருந்தார்கள். அவ்விருவரும் ஒரு மரத்தினடியில் சென்றபோது பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மரத்தின் கிளையைப் பிடித்து அசைத்தார்கள். அக்கிளையில் உள்ள இலைகளெல்லாம் உதிர்ந்து விட்டன. தமது அருகில் இருந்த தோழர் அபூதர்ரிடம் "அபூதர்ரே! நிச்சயமாக ஒரு முஸ்லிம் இறைவனின் பொருத்தத்தை நாடி அவனுக்காகவே ஐந்து நேரமும் தொழுதானேயானால் இந்த மரத்தின் இலைகள் உதிர்ந்தது போன்று அவனுடைய பாவங்களெல்லாம் அவனை விட்டும் விலகிவிடும்" என்று சொன்னார்கள்.

**நீதி : ஐவேளையும் தொழுதால் அனைத்து பாவங்களும் நீங்கும்.**

**7.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம், "தோழர்களே! உங்களின் குழந்தைகள் ஏழு வயது அடைந்தால் அவர்களை ஐந்து நேரமும் தொழும்படி ஏவுங்கள். அவர்கள் பத்து வயது அடைந்தும் தொழவில்லையானால் அவர்களை அடித்தும் தொழும்படி சொல்லுங்கள். இந்த வயதை எய்திய குழந்தைகளை நீங்கள் தூங்கும்போது உங்களுடைய படுக்கையை விட்டும் பிரித்து வேறு படுக்கையில் தூங்க வையுங்கள்" என்று சொன்னார்கள்.

**நீதி : சிறு வயதிலேயே தொழக் கற்றுக் கொள்ளுங்கள்.**

**8.** பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள், "ஒரு மனிதன் ரமளான் மாதத்தில் நோற்கும் நோன்பும் அவன் ஓதும் குர்ஆனும் மறுமை நாளில் அவனுக்காக சிபாரிசு செய்யும். நோன்பு தனது இறைவனிடத்தில், " இறைவா! இந்த மனிதன் ரமளான் மாதத்தில் பகலெல்லாம் உண்ணாமலும் குடிக்காமலும் சுகம் அனுபவிக்காமலும் தனது உடம்பை தடுத்திருந்தான். ஆகவே அவனுக்காக நான் சிபாரிசு செய்கின்றேன்" என்று

சொல்லும். அதுபோல் குர்ஆன் தனது இறைவனிடத்தில் "இறைவா! இந்த மனிதன் ரமளான் மாதத்து இரவுகளில் நின்று வணங்கி என்னை ஓதி மகிழ்ந்தான். ஆகவே அவனுக்காக நான் சிபாரிசு செய்கின்றேன்" என்று சொல்லும்.

**நீதி : ரமளான் மாதத்தில் நோன்பு நோற்று குர்ஆனை அதிகமாக ஓதவேண்டும்.**

**9.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் மிம்பர் படியின் மீது ஏறும்போது முதற்படியில் ஏறியதும் ஆமீன் என்றார்கள். இரண்டாவது படியில் ஏறியதும் ஆமீன் என்றார்கள். மூன்றாவது படியில் ஏறியதும் ஆமீன் என்றார்கள். இதைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்களிடம் தோழர்கள் கேட்டபோது "நான் முதற்படியில் ஏறியதும் நபியே! உங்கள் பெயர் கேட்டு யார் ஸலவாத்து சொல்ல வில்லையோ அவர்கள் நாசமாகட்டும் என்று சப்தம் கேட்டது. நான் "ஆமீன்" என்றேன். இரண்டாவது படியில் ஏறியதும் யார் சகல வசதிகள் இருந்தும் ரமளான் மாதத்தில் வேண்டுமென்றே நோன்பு பிடிக்காமல் இருக்கின்றனரோ அவர்கள் நாசமாகட்டும் என்று சப்தம் வந்தது. அதற்கும் நான் "ஆமீன்" என்றேன். மூன்றாவது படியில் ஏறியதும் யார் அவர்களுடைய பெற்றோரை கவனிக்காமல் இருக்கின்றனரோ அவர்கள் நாசமாகட்டும் என்று சப்தம் வந்தது. அதற்கு நான் "ஆமீன்" என்றேன்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் விளக்கம் தந்தார்கள்.

**நீதி : ரமளான் நோன்பு வைத்தல், நாயகத்தின் பெயரைக் கேட்டதும் ஸலவாத்து ஓதுதல், பெற்றோரைப் பேணி நடத்தல் - இவை இஸ்லாமிய ஒழுங்குகளாகும்.**

**10.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து "அல்லாஹ்வின் தூதரே! இவ்வுலகிலும் மறு உலகிலும் பலன் தரக்கூடிய செயல்களை எனக்கு சொல்லித் தாருங்கள் என்று வேண்டிக் கொண்டார். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் உம்முடைய தாய் தந்தையருக்கு செய்யவேண்டிய கடமைகளை



நீர் சரிவர செய்து அவ்விருவருக்கும் வழிப்பட்டு நடப்பீரானால் உமக்கு இவ்வுலகிலும், மறுஉலகிலும் பல பலனுண்டு. அவ்விருவருக்கும் நீர் கொடுத்த ஒவ்வொரு கவள உணவுக்கும் உமக்கு சொர்க்கத்தில் ஒரு மாளிகை உண்டு எனக் கூறினார்கள்.

**நீதி : பெற்றோரைப் பேணி நட.**

**11.** பெருமானார்(ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து "நாயகமே! நான் யாருடன் நல்லமுறையில் நடந்து கொள்ள வேண்டும்?" என்று வினவினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "உமது அன்னையிடம்" என்று சொன்னார்கள். பிறகு யாரிடம் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று வினவினார். அதற்கும் பெருமானார் (ஸல்) அவர்கள் "உமது அன்னையிடம்" என்று சொன்னார்கள். பிறகு யாரிடம் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று வினவினார். அப்போதும் பெருமானார் (ஸல்) அவர்கள் "உமது அன்னையிடம்" என்ற பதிலையே திருப்பிச் சொன்னார்கள். பிறகு யாரிடம் நல்ல முறையில் நடந்துக் கொள்ள வேண்டும் என்று நான்காவது முறையாக கேட்ட போது "உமது தந்தையிடம்" என்ற பெருமானார் (ஸல்) அவர்கள் பதில் சொன்னார்கள்.

**நீதி : தாய் தந்தையருக்கு மரியாதை செய்.**

**12.** பெருமானார்(ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து நாயகமே! என்னைப் பெற்றவர்களுக்கு நான் செய்யவேண்டிய கடமை என்ன? என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் உங்களைப் பெற்றவர்கள் இருவரும் உமக்கு சுவர்க்கம் அல்லது நரகம் என்றார்கள். அதாவது நீர் பெற்றவர்களுக்கு பணிவிடை செய்தால் சுவர்க்கம் புகலாம். அவர்களுக்கு நோவினை செய்தால் நரகம் புகநேரிடும் என்பது இதன் கருத்தாகும்.

**நீதி : பெற்றோர்களுக்கு பணிவிடை செய்தால் சுவர்க்கம் கிடைக்கும்.**

**13.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு சமயம் தமது தோழர்களிடம் " ஒருவன் தனது தாய் தந்தையரை சபிப்பது நிச்சயமான பெரும் பாவங்களில் மிகப்பெரிய பாவமாகும்" என்று சொன்னார்கள். உடனே ஒருவர் எழுந்து நின்று "நாயகமே! ஒருவன் எப்படி தனது தாய் தந்தையரை சபிப்பான்" என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்கள் "ஒருவன் இன்னொருவனின் தாய் தந்தையை திட்டினால் அவன் இவனுடைய தாய் தந்தையரை திட்டுவான். ஆகவே நீங்கள் மற்றவர்களுடைய தாய் தந்தையரை திட்டுவதை விட்டும் தவிர்த்துக் கொள்ளுங்கள்," என்று சொன்னார்கள்.

**நீதி : பிறரின் பெற்றோரைத் திட்டக்கூடாது.**

**14.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதன் வந்து "யா ரசூலல்லாஹ்! நான் அதிகமான பாவங்களை செய்துள்ளேன். அப்பாவங்களை இறைவன் மன்னிப்பானா? என் பாவங்களுக்கு இறைவனிடம் மன்னிப்பு பெற நான் எந்த நல்ல காரியங்களை செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "உனக்கு தாயார் இருக்கின்றார்களா?" என்று கேட்க, அவர் "இல்லை" என்று சொன்னார். சிறிய தாயார் இருக்கின்றாரா என்ற கேட்க "ஆம்" என்றார். "அவருக்கு நீ பணிவிடை செய்து கொண்டிரு. அதுவே உன் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறும் வழியாகும்" என்று சொன்னார்கள்.

**நீதி : தாயாரையும் சிறிய தாயாரையும் கண்ணியப்படுத்த வேண்டும்.**

**15.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தமது தோழர்களுக்கு தருமத்தைப் பற்றி உபதேசம் செய்யும் போது சொன்னார்கள். "பூமி அசைந்தாடாமல் இருக்க அல்லாஹ் மலைகளை படைத்து அதன் மீது வைத்தான். மலைகளுடைய பலத்தைப் பார்த்த வானவர்கள் அல்லாஹ்வைப் பார்த்து



உன்னுடைய படைப்புகளில் மலைகளைவிட மிக பலம் உடையது எது என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ் "இரும்பு" என்று விடையளித்தான். இரும்பைவிட மிகப்பலம் உடையது எது? என்ற கேட்க அல்லாஹ் "நெருப்பு" என்று விடையளித்தான். நெருப்பைவிட மிக பலம் வாய்ந்தது எது? என்று கேட்க அல்லாஹ் "தண்ணீர்" என்று விடையளித்தான். தண்ணீரை விட மிகவும் பலம் உடையது எது? என்று கேட்க அல்லாஹ் "காற்று" என்று விடையளித்தான். காற்றை விட மிகவும் பலம் உடையது எது என்று கேட்க அதற்கு அல்லாஹ் " ஒரு மனிதன் தனது வலக்கரம் செய்யும் தருமத்தை தனது இடதுக்கரம் அறியாமல் மறைத்துக் கொடுக்கின்றானே அது மற்ற எல்லா வற்றையும்விட மிகப் பெரியதாகும்" என்று விடையளித்தான்.

**நீதி : மற்றவர்களுக்கு தெரியாமல் கொடுக்கும் தருமமே சிறந்தது.**

**16.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் சிலர் வந்து நாயகமே! செல்வந்தர்கள் தங்களின் தேவைக்கு மேல் மிஞ்சிய பொருள்களைத் தருமம் செய்து அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் எங்களால் அவ்வாறு தருமம் செய்ய இயலவில்லையே! என்று வருத்தப்பட்டனர். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் "தோழர்களே! இறைவனை (தஸ்பீஹ்) தியானம் செய்து கொண்டு இருப்பதும் நீங்கள் செய்யும் தருமமாகும். நற்செயல்கள் செய்யுமாறு பிறரை ஏவுவதும் நீங்கள் செய்யும் தருமமாகும். தீயச் செயல்களைச் செய்யாது பிறரை விலக்குவதும் நீங்கள் செய்யும் தருமமாகும்" என்று சொன்னார்கள்.

**நீதி : தன்னால் இயன்ற அளவு தரும் செய்ய வேண்டும்.**

**17.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து நாயகமே! என்னிடத்தில் ஒரு தீனார் பணம் உள்ளது. அதை என்ன செய்வது என்று கேட்டார். அதை உனக்காக செலவு செய்து கொள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள்

சொன்னார்கள். இன்னுமொரு தீனார் இருக்கிறது என்றார். அதை உன்னுடைய குழந்தைகளுக்காக செலவு செய்து கொள் என்றார்கள். இன்னும் ஒரு தீனார் இருக்கின்றது என்றார். அதை உனது வேலைக்காரனுக்காக செலவு செய்து விடு என்றார்கள். இன்னும் ஒரு தீனார் இருக்கின்றது என்றார். அதைப்பற்றி உனக்கே தெரியும் (அதை தருமம் செய்துவிடு) என்று கூறினார்கள்.

**நீதி : தனக்கு மிஞ்சியதை தருமமாக் கொடுத்துவிட வேண்டும்.**

**18.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் மிம்பர் படிமேல் ஏறி தருமத்தைப் பற்றி (ஸதகா) பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் போது, "கீழே உள்ள கையைவிட மேலே உள்ள கை சிறந்தது" என்று சொன்னார்கள். நாயகத் தோழர்களால் அதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் "கீழே உள்ள கை என்பது மனிதர்களிடம் தங்கள் தேவையை கைநீட்டிக் கேட்பதாகும். மேலே உள்ள கை என்பது மற்றவர்களுக்கு தருமம் செய்யும் கையாகும்" என்று விளக்கம் கொடுத்தார்கள்.

**நீதி : கொடுப்பவனாக இரு; கேட்பவனாக இராதே.**

**19.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு நாள் தோழர்கள், "நாயகமே! மனிதன் மரணித்த பின்பும் அவனுக்கு நன்மைகள் கிடைத்துக்கொண்டே இருக்கும் செயல்கள் யாவை?" எனக் கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள்: 1) தாம் கற்று பிறருக்கும் கல்வியை போதிப்பது. 2) தனது பிள்ளைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாக வளர்ப்பது. 3) மற்றவர்கள் ஓதுவதற்காக குர்ஆன் ஷரீபை வாங்கி வைப்பது. 4) இறைவனின் பெயரால் பள்ளி வாசல் கட்டுவது. 5) மபிரயாணிகள் வசதிக்காக விடுதிகள் கட்டுவது. 6) மக்களின் வசதிக்காக ஆறு, குளம் வெட்டுவது. 7) தான் சம்பாதித்த சொத்திலிருந்து பிறருக்கு தருமம் செய்வது.



இவைகளெல்லாம் அழியாத அறங்களாகும். அவைகள் நிரந்தரமாக இருக்கும் வரை அதன் நன்மைகள் அதைச் செய்தவருக்கு அவர் மரணித்த பின்பும் கிடைத்துக் கொண்டே இருக்கும்" என்று விடையளித்தார்கள்.

**நீதி : பிறருக்கு பயன் தரும் வகையில் தருமங்கள் செய்திடுக.**

**20.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம், தோழர்களே! உங்களிடம் ஒரு பொற்காசு இருந்தால் உங்களுக்காக வைத்துக் கொள்ளுங்கள். இன்னொரு காசு இருந்தால் அதை உங்கள் மனைவிக்குக் கொடுங்கள். அதற்கு மேலும் பொற்காசுகள் இருந்தால் அதை உமது ஆதரவில் இருப்போருக்குக் கொடுங்கள். இன்னும் உங்களிடம் காசு இருந்தால் அதை பெற்றுக் கொள்ள தகுதியுடையோர் எவரோ அவர்களுக்குக் கொடுங்கள் என்று சொன்னார்கள்.

**நீதி : எல்லாவற்றையும் தாமே வைத்துக் கொள்ளாமல் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதே சிறந்தது.**

**21.** பெருமானார் (ஸல்) அவர்களுடைய தோழர்களில் வறுமையால் சிரமப்பட்டுக் கொண்டிருந்த ஒரு தோழருக்கு சமைத்து சாப்பிட ஆட்டுத்தலை ஒன்று கொடுக்கப்பட்டது. அதை வாங்கிய அந்தத் தோழர், வேறொரு ஸஹாபி தன்னை விட வறுமையால் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு அவருக்குக் கொடுத்து விட்டார். அதைப் பெற்றுக்கொண்ட இரண்டாம் தோழர் மூன்றாவதாக வறுமையில் வாடும் ஒரு நாயகத் தோழருக்கு கொடுத்து அனுப்பினார். இவ்வாறே அத்தலை ஏழு பேருக்கு கொடுக்கப்பட்டு இறுதியாக முதலில் கொடுக்கப்பட்ட தோழருக்கே திருப்பி வந்து சேர்ந்து விட்டது.

**நீதி : நமக்குக் கிடைத்ததை நம்மைவிட வறுமையால் வாடும் மற்றவருக்குக் கொடுத்து உதவவேண்டும்.**

**22.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் ஒரு நாள் "தோழர்களே! உங்களில் யார் ஆடையற்றவருக்கு ஆடை

கொடுத்து உதவுகின்றாரோ அவருக்கு இறைவன் மறுமையில் சுவர்க்க ஆடைகளை அணிவிக்கின்றான். உங்களில் யார் உணவு கொடுத்து உதவுகின்றாரோ அவருக்கு இறைவன் மறுமையில் சுவர்க்கத்தின் உணவு வகைகளைக் கொடுக்கின்றான். உங்களில் யார் தாகித்தவருக்கு தண்ணீர் கொடுக்கின்றாரோ அவருக்கு இறைவன் மறுமை நாளில் சுவர்க்கத்தில் உள்ள ஓடைகளின் தண்ணீரை அருந்தச் செய்கின்றான்'' என்று சொன்னார்கள்.

**நீதி : மற்றவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்திடுக.**

**23.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஏழை சஹாபி ஒருவர் தன்னிடமுள்ள சிறிய தங்கக்கட்டி ஒன்றைக் கொடுத்து இதை தர்மமாகக் கொடுத்து விட நாடுகின்றேன். இதைத் தவிர என்னிடம் வேறு எதுவும் இல்லை என்றார். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் தனது திருவதனத்தை அவர் பக்கமிருந்து திருப்பிக் கொண்டார்கள். அம்மனிதரும் திரும்பத் திரும்ப தாம் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், சிலர் தங்களிடம் இருப்பதையெல்லாம் தருமம் கொடுத்து விட்டு பின்னர் மனிதர்களிடம் யாசகம் கேட்க ஆரம்பித்து விடுகின்றனர். இது தவறாகும் எனக் கூறினார்கள்.

**நீதி : இருப்பதைக் கொடுத்து விட்டு யாசகம் கேட்கக் கூடாது.**

**24.** பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களின் தோழர்களிடத்தில் "தோழர்களே! நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பாகப் பழகிக்கொள்ளுங்கள். உடம்பில் உள்ள ஓர் உறுப்புக்கு நோய் வந்தால் மற்ற உறுப்புகள் உறக்கமின்றியும் நோய் வாய்ப்பட்டும் வேதனை அடைவதைப் போல நீங்களும் மற்றவர்களின் துன்பத்தை தனது துன்பமாக எண்ணிக் கொள்ளுங்கள். அவர்களுக்காக உங்களாலான உதவியைச் செய்யுங்கள்'' என்று சொன்னார்கள்.



**நீதி : உதவி தேடுவோருக்கு உங்களாலான உதவியைச் செய்திடுக.**

**25.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து நாயகமே! என் குடும்பம் வறுமையால் வாடுகிறது. ஏதாவது பொருள் உதவி செய்யுங்கள் என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் உன் வீட்டில் ஏதாவது பொருள்கள் இருக்கின்றதா? என்று வினவினார்கள். தண்ணீர் அருந்துவதற்காக ஒரு பாத்திரமும், ஒரு போர்வையும் இருக்கின்றது என்று அவர் சொல்ல, அந்தப் பொருள்களை எடுத்து வரச் சொல்லி அவற்றை ஸஹாபாக்களுக்கு மத்தியில் ஏலம் விட்டார்கள். அதில் கிடைத்த பணத்தை அவரிடம் கொடுத்து இதில் பாதியை உனது குடும்பத்தாருக்குக் கொடுத்து விடு, மீதியை ஒரு கோடாரி வாங்கி விறகு வெட்டி விற்று வாழ்க்கை நடத்து என்று சொல்லியனுப்பினார்கள்.

**நீதி : மற்றவரிடம் கை ஏந்தாமல் உழைத்து வாழ வேண்டும்.**

**26.** பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர் ஒருவருக்கு ஜிஹாத் (போர்) நிதிக்காக தாமும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாக இருந்தது. ஆனால் கொடுப்பதற்கு அவரிடம் ஒன்றும் இல்லை. என்ன செய்வதென்று யோசித்தார். நேராக ஒரு யூதனிடம் சென்று காலையிலிருந்து மாலைவரை அவனுடைய தோட்டத்திற்கு தண்ணீர் இறைத்து ஊற்றினார். மாலையில் அவருக்குக் கூலியாக ஒரு கை நிறைய பேரீச்சம் பழங்கள் கிடைத்தன. அவற்றைப் பெற்றுக் கொண்டு அண்ணலாரிடம் விரைந்து சென்று அவற்றைக் கொடுத்து இது இந்து ஏழையின் ஜிஹாத் நிதியாகும் என்று மகிழ்வோடு கூறினார். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் "தோழரே! இங்கு குவிந்து இருக்கும் நிதிகள் எல்லாவற்றையும் விட இது மிக உயர்ந்ததாகும்'' என்றார்கள்.

**நீதி : உழைப்பே உயர்வை தரும்.**

**27.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களோடு, பள்ளியில் அமர்ந்திருந்த போது நாட்டுப்புற அரபி ஒருவர் பெருமானாரின் திருக்கரங்களைப் பற்றி கை குலுக்கினார். அவரது கையின் கடினத்தைக் கண்டு பெருமானார்(ஸல்) அவர்கள் வியப்படைந்து, "நண்பரே! உங்களது கைகள் ஏன் இவ்வளவு கடினமாக இருக்கின்றன?'' என்று கேட்டார்கள். "எனக்கு விபரம் தெரிந்த நாட்களிலிருந்து நான் உழைத்தே வாழ்க்கையை நடத்தி வருகின்றேன்'' என்று அவர் சொல்ல உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வரபியின் கைகளை எடுத்து தங்கள் திருக்கண்களிலே ஒத்திக் கொண்டு,"உழைத்து உரமேறிய கரங்களே எனக்குப் பிடித்தமானவை'' என்று கூறினார்கள்.

**நீதி : உழைத்தே வாழ வேண்டும்.**

**28.** பெருமானார் (ஸல்) அவர்களுக்கு உஹத் யுத்தத்தில் உடம்பு முழுவதும் காயம் ஏற்பட்டு இரத்தம் வடிய ஆரம்பித்தது. அப்போது அருகிலிருந்து ஸஹாபாக்கள் பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து, நாயகமே, உங்களை இந்த நிலையிலாக்கிய எதிரிகளை சபியுங்கள் என்று கேட்டுக் கொண்டனர். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவன் என்னைச் சபிப்பதற்காக அனுப்பவில்லை எனக் கூறி, இறைவா! இந்த மக்கள் அறியாதவர்கள். இவர்கள் எனக்கு செய்த தீங்குகளை மன்னிப்பாயாக என்று இறைவனிடம் பிரார்த்தித்தார்கள்.

**நீதி : தீமை செய்தவருக்கு அவர் நாணும்படி நன்மை செய்துவிட வேண்டும்.**

**29.** பெருமானார் (ஸல்) அவர்கள் வெளியே செல்லும் போதெல்லாம் ஒரு கிழவி அவர்களின் மீது குப்பைகளைக் கொட்டி இழிவுபடுத்திக் கொண்டே இருப்பாள். ஒரு நாள் பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வீதி வழியே செல்லும் போது குப்பை கொட்டும் அக்கிழவியைக் காணவில்லை. அதைப் பற்றி



பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் கேட்டபோது அந்தக் கிழவிக்கு சில நாட்களாக உடம்பு சுகமில்லை என்று சொன்னார்கள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் அக்கிழவி தமக்குத் தொந்தரவு கொடுத்தவள் என்று கூட எண்ணாமல் அவள் வீட்டிற்குச் சென்று அவளது நோயை விசாரித்து வந்தார்கள்.

**நீதி : தீமை செய்தவருக்கும் நன்மை செய்து விடல் இனிய பழக்கமாகும்.**

**30.** பெருமானார் (ஸல்) அவர்கள் பள்ளியில் அமர்ந்து தமது தோழர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கும் போது இஸ்லாத்தைத் தழுவாத சிலர் "முஹம்மதே! உம்மை நபி என்று நாம் ஒப்புக் கொள்ள வேண்டுமென்றால் முன் உள்ள நபிமார்கள் செய்து காட்டியது போன்று சில அற்புதங்களை நீரும் செய்து காட்டவேண்டும். அல்லாஹ்வை நேரில் காட்ட வேண்டும். அவனது அமரர்களை இங்கே கொண்டு வரவேண்டும். தங்கத்தினாலான நீர் ஊற்று ஒன்று அமைக்க வேண்டும். வானத்தில் உயரே பறந்து சென்று இறைவனிடமிருந்து புத்தகமொன்றை கொண்டு வந்து தரவேண்டும். இவ்வாறு நீர் செய்து காட்டினால் உம்மை நபி என்று ஒப்புக் கொள்கின்றோம்'' என்று கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் ஆணைப்படி அவர்களிடம் பதிலுரைத்தார்கள்: "நண்பர்களே! நானும் உங்களைப் போல் ஒரு மனிதன்தான். இறைவனின் தூதர் என்ற சிறப்பைத் தவிர வேறு எந்த தகுதியும் எனக்கு கிடையாது. எல்லா சக்தியும் உடையவன் இறைவன் ஒருவனே.''

**நீதி : எல்லா சக்தியும் உடையவன் இறைவன் ஒருவனே.**

**31.** பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நபி பட்டம் கிடைப்பதற்கு முன்னால் ஒரு தடவை கஃபா என்னும் ஆலயம் புதுப்பிக்கப்பட்டது. அப்போது பழைய கட்டிடத்தில் இருந்த "ஹஜ்ருல் அஸ்வத்'' என்ற கல்லை புதிய கட்டிடத்தில் வைத்துக்

கட்டவேண்டும். அந்தக் கல் புனிதமாகக் கருதப்பட்டதால் ஒவ்வொரு கோத்திரத்து தலைவரும் தாமே அக்கல்லை தூக்கி வைத்து புகழ் அடைய விரும்பினர். அதனால் அவர்களுக்கு இடையில் கலகம் ஏற்பட்டது. இறுதியில் அவர்கள் மறுநாள் காலையில் கஃபாவுக்குள் முதலாவதாக நுழையும் மனிதர் செய்யும் தீர்ப்பை எல்லோரும் ஏற்றுக் கொள்வதாக முடிவு செய்தனர். அந்த பாக்கியம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கே கிடைத்தது. உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு போர்வையை தரையில் விரித்து அதன் மேல் அக்கல்லை எடுத்து வைத்தார்கள். பிறகு எல்லா தலைவர்களையும் போர்வையின் ஓரங்களை பிடித்து தூக்கி வரச் சொல்லி அக்கல்லை வைத்துக் கட்ட வேண்டிய இடத்திற்கு கொண்டு சென்றார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களது திருக்கரத்தால் அதை எடுத்து அங்கு பதித்தார்கள்.

**நீதி : ஒற்றுமையே உயர்வைத் தரும்.**

**32.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் ஒரு நிகழ்ச்சியைச் சொல்லிக் காண்பித்தார்கள். "ஒரு மனிதன் பாலைவனத்தில் சென்று கொண்டிருக்கும் போது வழியில் ஒரு கிணறு இருந்தது. கிணற்றின் அருகில் நாயொன்று அடக்க முடியாத தாகத்துடன் நின்று கொண்டிருந்தது. நாய்க்குத் தண்ணீர் கொடுத்து அதன் தாகத்தை தணிக்க அந்த மனிதர் விரும்பினார். ஆனால் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க பாத்திரம் இல்லை. உடனே தமது போர்வையை எடுத்து அதன் ஒரு ஓரத்தை கிணற்றில் விட்டு நனைத்தார். அதைக் கிணற்றிலிருந்து எடுத்து நாயின் வாயில் பிழிந்தார். அவ்வாறு அவர் ஊற்றிய தண்ணீரால் நாயின் தாகம் தீர்ந்தது. அந்த மனிதர் அப்பிராணிக்கு உதவி செய்த காரணத்தால் அவர் இறந்த பிறகு இன்ஷா அல்லாஹ் சுவர்க்கம் செல்வார்" என்று கூறினார்கள்.

**நீதி : பிராணிகளிடமும் அன்பாக இரு.**



**33.** பெருமானார் (ஸல்) அவர்கள் உச்சிப் பொழுது நேரத்தில் ஒரு வழியாக போய்க் கொண்டிருந்தார்கள். அவ்வழியில் தீனி ஏதும் வைக்காமல் கயிறு போட்டு கட்டப்பட்டிருந்த ஓர் ஒட்டகத்தைப் பார்த்தார்கள். தமது வேலை முடிந்து பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் அவ்வழியாக திரும்பி வரும்போது அதே இடத்தில் அந்த ஒட்டகம் அப்படியே கட்டப்பட்டிருந்ததைப் பார்த்து அந்த ஒட்டகத்தின் சொந்தக்காரரை அழைத்து "நீர் இந்த ஒட்டகத்திற்கு தீனி கொடுத்தீரா?" என்று கேட்டார்கள். அவர் இல்லை எனக் கூற, 'நிச்சயமாக மறுமை நாளில் அல்லாஹ்வின் முன்னிலையில் இந்த ஒட்டகம் உம்மீது வழக்கு தொடரும்' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**நீதி : பிராணிகளைத் துன்புறுத்தக் கூடாது.**

**34.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு ஒரு நிகழ்ச்சியைச் சொல்லிக் காண்பித்தார்கள். "ஒரு பெண் தனது வீட்டில் ஒரு பூனையை வளர்த்தாள். அதை எப்போதும் கட்டி வைத்திருப்பாள். அதற்கு தீனி போடுவதில்லை. குடிக்க தண்ணீர் கொடுப்பதில்லை. அது பட்டினியாகவே பல நாள் இருந்தது, அதன் காரணமாகவே அது இறந்து விட்டது. இவ்வாறு அப்பெண்மணி அந்தப் பூனைக்கு தொந்திரவு கொடுத்ததால் அவள் இறந்த பிறகு அவளுக்குக் கிடைக்கும் இடம் நரகமே" என்று கூறினார்கள்.

**நீதி : மிருகங்களைத் துன்புறுத்துவோர் ஒதுங்கும் இடம் நரகமே.**

**35.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு பெண் வந்து புவியில் எந்த பாகம் மிகச் சிறந்தது? என்று கேட்டாள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் புவியில் எந்த இடங்களில் இறை இல்லங்கள் உள்ளனவோ அந்த இடங்களே மிகச் சிறந்த இடங்களாகும் என்று சொன்னார்கள். மீண்டும் அப்பெண்மணி "புவியில் எந்த பாகம் மிகத்தீயது" என்று கேட்டாள். அதற்கு

பெருமானார் (ஸல்) அவர்கள் புவியில் எந்த இடங்களில் கடைகள் உள்ளனவோ அந்த இடங்களே மிகத் தீய இடங்களாகும் என்று சொன்னார்கள்.

**நீதி : இறை இல்லங்களே சிறந்த இடங்களாகும்.**

**36.** பெருமானார் (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் ஒருநாள் பள்ளிவாசலில் அமர்ந்திருக்கும் போது காட்டரபி ஒருவர் மஸ்ஜிதுன்னபவிக்குள் சிறுநீர் கழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். உடனே நபித்தோழர்கள் அந்தக் காட்டரபியை அதட்டி மிரட்ட ஆரம்பித்தார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் தோழர்களைப் பார்த்து அவரை அதட்ட வேண்டாம் என்று தடுத்துவிட்டு அக்காட்டரபி சிறுநீர் கழித்து முடியும் வரை காத்திருந்தார்கள். பிறது தண்ணீரை கொண்டு வந்து அந்த இடத்தை கழுவி சுத்தப்படுத்தினார்கள். இது இறைவனின் இல்லமாகும். இதை அசுத்தப்படுத்துவது தவறாகும் என்று அக்காட்டரபிக்கு எடுத்துக் கூறினார்கள்.

**நீதி : இறை இல்லங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.**

**37.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து "யா ரஸூலல்லாஹ்! நான் உலகில் உள்ள எல்லாப் பாவங்களையும் செய்யக்கூடியவன். நான் செய்யும் எல்லாப் பாவங்களையும் விட்டு நல்லவனாக மாற எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்" என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "உம்மால் எல்லாப் பாவங்களையும் விட இயலவில்லை என்றாலும் பொய் பேசுவதை மட்டுமாவது விட்டுவிடும்" என்று சொன்னார்கள். அவ்வாறே பொய் பேசுவதை விட்டுவிட்ட அவரது மனத்தில் எந்த பாவச் செயலைச் செய்யச் சென்றாலும் இந்தப் பாவச் செயலைச் செய்தால் நாளை பெருமானாரிடம் பொய் சொல்ல நேரிடுமே என்ற எண்ணம் தோன்றி எல்லாப் பாவச் செயல்களையும் விட்டு நல்லவராகி விட்டார்.

**நீதி : பொய்யே பாவங்களனைத்துக்கும் ஆணிவேர்.**



**38.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் "தோழர்களே நீங்கள் பேசும் போது உண்மையே பேசுங்கள். நிச்சயமாக உண்மையாகிறது நல்ல செயல்களின் பக்கம் அழைத்துச் செல்கிறது. நீங்கள் பொய் பேசுவதை விட்டும் உங்களை எச்சரிக்கை செய்கின்றேன். நிச்சயமாக பொய் பேசுவது தீய செயல்களின் பக்கம் அழைத்துச் செல்கிறது. தீய செயல்கள் நரகத்தின் பக்கம் அழைத்துச் சென்றுவிடும்" என்று அறிவுறுத்தினார்கள்.

**நீதி : உண்மையே பேசி பொய்யைத் தவிர்த்துக்கொள்.**

**39.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது அறையில் தோழர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது ஜரீர் என்ற ஒரு தோழர் அங்கு வந்தார். அறையில் கூட்டம் அதிகமாக இருந்ததால் அவர் உட்காருவதற்கு இடம் இல்லை. உடனே அந்த தோழர் அறையின் வாசற்படியிலேயே உட்கார்ந்து கொண்டார். அதைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள் உடனே தமது போர்வையை அவரிடம் எறிந்து அதை விரித்து அதில் உட்காரும்படி சொன்னார்கள்.

**நீதி : நம்மைப் பார்க்க வந்தவர்களுக்கு நாம் மரியாதை செய்ய வேண்டும்.**

**40.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு யூதனிடம் கடன் வாங்கி இருந்தார்கள். கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்க ஒரு நாளும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த யூதன் அதற்கு முன்னரே வந்து பெருமானாரிடம் தனது கடனைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டான். அவமரியாதையான வார்த்தைகளை உபயோகித்தான். அப்போது அருகிலிருந்த உமர் (ரலி) அவர்கள் அந்த யூதனின் இழிவான

வார்த்தைகளைக் கேட்டுக் கோபமடைந்தார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் உமரே, இந்த யூதனுக்குரிய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடும்படி நீர் என்னை ஏவுவதே சரியாகும் என்று சொன்னார்கள்.

**நீதி : வாங்கிய கடனை திருப்பி கொடுத்துவிடுவதே சிறந்தது.**

**41.** பெருமானார் (ஸல்) அவர்கள் வியாபார சம்பந்தமாக அப்துல்லாஹ் என்ற நண்பரைச் சந்திக்கச் சென்றார்கள். அங்கு சென்ற போது அந்த நண்பர் "நீங்கள் சற்று காத்திருங்கள், நான் மற்றொரு நபரை சந்தித்து விட்டு வந்து விடுகின்றேன்" என்று சொல்லிச் சென்றார். பெருமானார் (ஸல்) அவர்களும் அவ்விடத்திலேயே காத்திருந்தார்கள். இதைப் பற்றி அந்த நண்பர் மறந்து விட்டார். மூன்று நாட்களுக்குப் பின் அவர் நினைவு வந்தவராக பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்திப்பதற்காக விரைந்து வந்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்விடத்திலேயே தமக்காக காத்திருப்பதைக் கண்டு மன்னிப்பை வேண்டினார். பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களை காக்க வைத்து விட்டதற்காக கோபப்படாமல் புன்முறுவல் பூத்தார்கள்.

**நீதி : கோபத்தை அடக்க வேண்டும்.**

**42.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் பள்ளியில் அமர்ந்திருந்தபோது கிழிந்த துணிகளை அணிந்த ஒரு மனிதர் அங்கு வந்து எல்லோருடன் சேர்ந்து சபையில் அமராமல் ஒரு மூலையில் நின்று பெருமானார் (ஸல்) அவர்களின் உபதேசங்களைக் கேட்ட வண்ணம் இருந்தார். அதைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள் எழுந்து அந்த மனிதரிடம் சென்று அவரை அணைத்தபடி சபைக்கு அழைத்து வந்தார்கள். அந்த மனிதர் பயந்து கொண்டே "தான் மிகவும் ஏழை. உங்கள் சபையில் உங்காருவதற்குத் தகுதி இல்லாதவன்" என்றார். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் "நானும்



ஏழைதான். காய்ந்த ரொட்டியும் பேரீச்சம் பழத்தையும் தின்று உயிர் வாழ்ந்த ஒரு பெண்ணின் வயிற்றில் பிறந்தவன் தான்" என்று உணர்ச்சியுடன் பதில் சொன்னார்கள்.

**நீதி : மனிதர்களில் ஏழை, செல்வந்தன் என்ற பாகுபாடு இருக்கக் கூடாது.**

**43.** பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி ஒருவர் "அல்லாஹ்வின் தூதரே! மற்றவர்களுடைய வீட்டிற்கெல்லாம் தாங்கள் விருந்தினராக சென்று வருகிறீர்கள். ஆனால் என் வீட்டிற்கு மட்டும் தாங்கள் வருவதில்லையே காரணம் யாது?" எனக் கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "நண்பரே! உங்கள் வீட்டில் நாய் வளர்க்கப்படுகிறது. நாய் வளர்க்கும் வீட்டில் ரஹ்மத்துடைய மலக்குகள் (அமரர்கள்) நுழைய மாட்டார்கள், ஆகவேதான் நானும் உங்கள் வீட்டிற்கு வருவதில்லை" என்று கூறினார்கள். உடனே அம்மனிதர் நாய் வளர்ப்பதை தவிர்த்துக் கொண்டார்.

**நீதி : வீடுகளில் நாய் வளர்த்தால் மலக்குகள் நுழைய மாட்டார்கள்.**

**44.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் மஸ்ஜிதுன் னபவி (மதீனாவின் பள்ளி)க்குச் சென்றபோது பள்ளியில் ஒரு பக்கம் சிலர் தாம் கற்றக் கல்வியை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் மற்றொரு பக்கத்தில் இறைவனை திக்ரு (தியானம்) செய்து கொண்டிருந்தனர். இவ்விரண்டையும் பார்த்த பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த இரு கூட்டத்தாரும் சிறந்தவர்கள்தாம். ஆனால் திக்ரு செய்யும் கூட்டத்தைவிட மற்றவருக்கு கல்வியைக் கற்றுக் கொடுக்கும் கூட்டமே மிகச் சிறந்தது. ஏனென்றால் அவர்கள் தாம் கற்ற கல்வியை மற்றவருக்குக் கற்றுக் கொடுத்து அவர்களையும் நேர்வழியில் செல்ல உதவுகின்றனர் எனக்கூறி கற்று கொடுக்கும் அவையிலேயே தாங்களும் அமர்ந்துக் கொண்டார்கள்.

**நீதி : நாம் கற்ற கல்வியை மற்றவருக்கும் கற்றுத் தர வேண்டும்.**

**45.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஓர் அறிஞரைப் பற்றி (ஆலிம்)யும் ஒரு ஞானி (ஆபித்)யைப் பற்றியும் கேட்கப்பட்டது. அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் "ஞானியை விட அறிஞரே சிறந்தவர்" என்று சொல்லி நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய அமரர்களும் வானம் பூமியில் வாழக் கூடிய அனைத்தும், புற்றிலுள்ள எறும்பு முதல் கடலிலுள்ள மீன் வரையிலும் மனிதர்களுக்கு நல்லதைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் மீது ஸலாம் (வாழ்த்து) சொல்கின்றனர்" என்று சொன்னார்கள்.

**நீதி : நல்லதைக் கற்றுத் தருபவரே சிறந்தவர்.**

**46.** பெருமானார் (ஸல்) அவர்கள் மரணத் தருவாயில் இருந்த ஒருவரைப் பார்த்து உம்முடைய நிலை எப்படி இருக்கின்றது எனக் கேட்டார்கள். அதற்கு அவர் "அல்லாஹ்வின் தூதரே! நான் அல்லாஹ்வின் அருளில் ஆசை வைத்தவனாகவும் என்னுடைய பாவங்களை நினைத்து வருந்தியவனாகவும் இருக்கின்றேன்" என்று பதில் கூறினார். அதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் யாருடைய உள்ளம் இறையச்சத்துடன் பாவமன்னிப்புத் தேடுகிறதோ அவருடைய ஆசையை அல்லாஹ் தீர்த்துவைப்பான் என்று கூறினார்கள்.

**நீதி : நாம் செய்த பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்புத் தேடவேண்டும்.**

**47.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் "தோழர்களே! தண்ணீர்பட்டு இரும்பு எப்படி துருப்பிடித்துக் கொள்கிறதோ அதே போன்று பாவம் செய்வதனால் மனிதர்களின் உள்ளங்களும் துருப்பிடித்துக் கொள்கின்றன" என்று சொன்னார்கள். இதைக் கேட்ட நாயகத் தோழர்கள் அவற்றைச் சுத்தம் செய்வது எப்படி? என்று கேட்க, அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் "மரணத்தை நினைத்துப் பார்ப்பதும், இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுவதும், அதிகமாக குர்ஆன் ஓதுவதும் பாவமென்னும் கறைகளை நீக்கக் கூடிய செயல்களாகும்" என்று சொன்னார்கள்.



**நீதி : பாவமென்னும் கறைகளைப் போக்க பாவ மன்னிப்பு அவசியம்.**

**48.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடத்தில் "தோழர்களே! உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு பதவிகள் உயர்த்தப்படும் உன்னதமான விஷயங்களை உங்களுக்கு நான் கூறுகின்றேன்" என்று சொல்லி கீழ்க்காணும் விஷயங்களைச் சொன்னார்கள், 1. சிரமமான நேரங்களிலும் ஒளுவை பூரணமாக நிறைவேற்றுதல். 2. பள்ளிவாசலுக்கு அடிக்கடிச் சென்று நல்ல விஷயங்களில் ஈடுபடுதல், 3. ஒரு தொழுகைக்குப் பின் மறு தொழுகையை எதிர்பார்த்துக் கொண்டிருத்தல்.

**நீதி : நற்செயல்கள் அனைத்தும் பாவங்களை மன்னிக்கும் மருந்தே.**

**49.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு போரின் போது ஓய்வெடுப்பதற்காக ஒரு மரத்தடியை நோக்கிச் சென்றார்கள். அம்மரக் கிளையில் தமது வாளைத் தொங்கவிட்டு சற்று நேரம் தூங்கினார்கள். அப்போது அங்கு வந்த எதிரிகளில் ஒருவன் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த வாளைக் கையில் எடுத்து பெருமானாரின் நெஞ்சில் வைத்து "முஹம்மதே இப்போது உங்களைக் காப்பாற்றுபவர் யார்?" என்று கேட்டான். பெருமானார் (ஸல்) அவர்கள் "அல்லாஹ்" என்று சொன்னார்கள். அவன் நடுங்கிய படியே வாளைக் கீழே போட்டுவிட்டான். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த வாளை தமது கையில் எடுத்துக் கொண்டு "இப்போது உன்னைக் காப்பாற்றுவது யார்?" என்று கேட்டார்கள். "நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று கூறினான். உடனே

பெருமானார் (ஸல்) அவர்கள் "உன்னையும் என்னையும் காப்பாற்றக் கூடியவன் நம்மைப் படைத்த இறைவன் ஒருவனே. அவனிடம் காவல் தேடு'' என்று கூறி அவனை மன்னித்து அனுப்பினார்கள்.

**நீதி : நாம் இறைவனிடமே பாதுகாப்புத் தேட வேண்டும்.**

**50.** பெருமானார் (ஸல்) அவர்கள் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் ஒரு குகையில் தங்கி இருந்தபோது எதிரிகளில் இருவர் அவர்களைத் தேடிக் கொண்டு அக்குகையின் அருகில் வந்து விட்டனர். அவர்களின் பேச்சு சப்தத்தைக் கேட்ட அபூபக்கர் (ரலி) அவர்கள் "நாயகமே! நாம் இருவர் மட்டும் தனியாக இருக்கின்றோம்'' என்று பயந்தவர்களாக சொன்னார்கள். அதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் "நாம் இருவர் மட்டும் இங்கு தனியாக இல்லை. நம்முடன் மூன்றாவதாக நம்மைப் படைத்த இறைவனும் இருக்கின்றான் அவன் உதவி நமக்கு என்றும் உண்டு'' என்று சொன்னார்கள். அவர்களைத் தேடி வந்த எதிரிகள் குகையினுள் புகுந்து பார்க்க எண்ணம் கொண்டனர். ஆனார் குகையின் வாசலில் சிலந்தி பூச்சிகள் வலை பின்னி இருந்தன. புறா ஒன்று முட்டை யிட்டிருந்தது. இவைகளை கண்ட எதிரிகள் குகையினுள் மனிதர்கள் இருந்தால் இவ்விரண்டும் இங்கு குடி இருக்காது என்று முடிவு செய்து அங்கிருந்து போய்விட்டனர்.

**நீதி : இறைவனை நம்பினோர் கைவிடப்படார்.**

**51.** பெருமானார் (ஸல்) அவர்கள் படுக்கையில் தூங்கும்போது மிருதுவாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களுடைய துணைவியார் ஹப்ஸா நாயகி (ரலி) அவர்கள் ஒரு சாக்கை நான்காக மடித்து படுக்கை விரித்தார்கள். காலையில் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது துணைவியாரிடம் "ஹப்ஸாவே! வழக்கத்திற்கு மாறாக இன்று படுக்கைக்கு என்ன விரித்து இருந்தாய்?'' என்று கேட்டார்கள். சாக்கை நான்காக மடித்து விரித்து இருந்தேன் என்று



துணைவியார் சொல்ல, இனிமேல் அப்படி விரிக்க வேண்டாம். விரிப்பு மிருதுவாக இருப்பது இரவில் விழித்து எழுந்து வணங்குவதற்குத் தடையாக உள்ளது என்றார்கள்.

**நீதி : சுகபோக வாழ்க்கை இறை தியானத்தை தடுக்கும் கருவியாகும்.**

**52.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் அன்னை பாத்திமா (ரலி) அவர்கள் ஒரு தீனார் நாணயத்தை கொண்டு வந்து காண்பித்து இதை எனது கணவர், வழியில் கிடந்ததாக கொண்டு வந்து கொடுத்தார். இதைப்பற்றி தாங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "இத இறைவன் கொடுத்ததாகும். என்று விடையளித்தார்கள். ஆகவே அதை அலீயும் பாத்திமா நாயகியும் செலவு செய்து விட்டனர். பிறகு அப்பணத்தை ஒருவர் தேடி கொண்டு வந்தபோது "அலீயே! நீங்கள் கண்டெடுத்த அப்பணத்தை அவரிடம் ஒப்படைத்து விடுங்கள்'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

**நீதி : கண்டெடுத்த பொருளை அதற்குரியவர் வந்து கேட்டால் கொடுத்துவிட வேண்டும்.**

**53.** பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னிலையில் ஒரு வழக்கு வந்தது. அதில் ஒரு யூதன் போர்க்கவசம் ஒன்றை திருடியதாக குற்றம் சாட்டப்பட்டான். பெருமானார் (ஸல்) அவர்கள் அதை விசாரித்ததில் அவன் குற்றம் இல்லாதவன் என்று நிரூபிக்கப்பட்டது. உண்மையில் ஒரு முஸ்லிம் போர் வீரன்தான் அதை திருடி யூதன் மீது பழியை போட்டு விட்டான். ஆகவே யூதனை விடுதலை செய்து விட்டு குற்றம் செய்த முஸ்லிம் வீரனுக்கு தண்டனை வழங்கினார்கள்.

**நீதி : நீதி வழங்குவதில் தன்னைச் சேர்ந்தவன், மாற்று இனத்தைச் சேர்ந்தவன் என்ற பாகுபாடு கூடாது.**

54. பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு திருடிய குற்றத்திற்காக ஒரு பெண்மணியைக் கொண்டு வந்தார்கள். அதைப் பற்றி தீர விசாரித்து அப்பெண் திருடியது உண்மைதான் என்று அறிந்த பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்குரிய தண்டனையாக குர்ஆனில் சொல்லி இருப்பதைப் போன்று அவளின் கையை வெட்டும்படி தீர்ப்பு கூறினார்கள். பிறகு மக்களிடம் திரும்பி 'நிச்சயமாக இக்காரியத்தை எனது செல்வ மகள் பாத்திமா (ரலி) அவர்கள் செய்து இருந்தாலும் அவர்களுடைய கையை வெட்டும்படி தீர்ப்புக் கூறுவேன்' என்று சொன்னார்கள்.

**நீதி : நீதி வழங்குவதில் நேர்மை வேண்டும்.**

55. பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் 'உங்களிடமில்லாத ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி யாரேனும் உங்களை ஏளனம் செய்யவோ கீழ்மைப்படுத்தவோ செய்தால் அவனிடமிருக்கும் ஒரு விஷயத்தை எடுத்து நீ அவனைக் குறை சொல்லவோ குற்றம் சாட்டவோ கூடாது. அவன் செய்த பலனை அவன் அனுபவிப்பான். நீ அவனைப் பழி வாங்காமல் இருந்தால் அல்லாஹ்விடமிருந்து அதற்கான நன்மை உனக்குக் கிடைக்கும். நிச்சயமாக நீங்கள் யாரையும் திட்ட வேண்டாம்' என்று சொன்னார்கள்.

**நீதி : பிறரைக் குறை சொல்லக்கூடாது.**

56. பெருமானார் (ஸல்) அவர்களிடம் புறம் பேசுதல் என்றால் என்ன என்று கேட்கப்பட்டது. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் புறம் பேசுதல் என்றால் உனது சகோதரனைப் பற்றி அவனுக்கு விருப்பமில்லாததைக் கூறுவதாகும் என்றார்கள். உடனே ஒருவர் கேட்டார், 'அக்குறை அவரிடம் இருந்தாலும் குறை சொல்லக் கூடாதா?' என்று. அக்குறை அவரிடம் இருந்தால் நீர் கூறுவது புறமாகும். அக்குறை அவரிடம் இல்லை என்றால் இல்லாததை உண்டு பண்ணி இட்டுக்கட்டுகிறாய். அக்குற்றம் உன் மீது ஏற்படும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.



**நீதி : புறம் பேசுவதைத் தவிர்த்துக் கொள்.**

57. பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தமது தோழர்களைப் பார்த்து 'நீங்கள் அகம்பாவத்தை விட்டும் எச்சரிக்கையாக இருங்கள். ஏனென்றால் அது இப்லீசை ஆதமுக்கு ஸஜூது (இறை வணக்கம்) செய்யாது இறைவனின் கட்டளையை மீற தூண்டுகோலாக இருந்தது. அது போல் நீங்கள் அதிக ஆசைப்படுவதை விட்டும் எச்சரிக்கையாக இருங்கள். ஏனென்றால் அது ஆதம் நபி அவர்களை இறைவனால் விலக்கப்பட்ட மரத்திலிருந்து கனியை உண்ணத் தூண்டியது. நீங்கள் பொறாமையை விட்டும் எச்சரிக்கையாக இருங்கள். ஏனென்றால் அது ஆதம் நபியின் இரு புதல்வர்களில் ஒருவர் இன்னொருவரை கொலை செய்யத் தூண்டியது. மேற்கூறிய துர்க்குணங்கள் அனைத்தும் பாவங்களுக்கு அடிப்படையாகும்' என்று உபதேசம் செய்தார்கள்.

**நீதி : அகம்பாவம், பேராசை, பொறாமை ஆகிய துர்க்குணங்களை தவிர்த்துக் கொள்.**

58. பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் ஏழு பெரிய பாவங்களை விட்டும் விலகி விடுங்கள் என்று சொன்னபோது சஹாபாக்கள் "அல்லாஹ்வின் தூதரே! அந்த பாவங்கள் யாவை?" என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், "1. அல்லாஹ்வுக்கு இணை வைத்தல் 2. சூனியம் செய்தல் 3. கொலை செய்தல் 4. வட்டி வாங்குதல் 5. அனாதைகளின் பொருள்களை அபகரித்தல் 6. தர்ம யுத்தத்திலிருந்து பின்வாங்குதல் 7. மற்ற பெண்களைப் பற்றி அவதூறு கூறுதல்" ஆகியவைகளாகும் என்று சொன்னார்கள்.

**நீதி : எல்லா பாவச் செயல்களை விட்டும் விலகி இருத்தல் வேண்டும்.**

**59.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் "தோழர்களே! பெரிய பாவங்கள் எவையென உங்களுக்கு அறிவிக்கவா?" என்று கேட்டார்கள். உடனே நாயகத் தோழர்கள் 'நாயகமே! எங்களுக்கு அவைகளைத் தெரிந்து கொள்ளும் ஆவல் அதிகமாக உள்ளது' என்று கூற "இறைவனுக்கு இணை வைப்பதும், பெற்றோர்களை நோவினை செய்வதும், பொய் சாட்சி சொல்வதும் பெரிய பாவங்களாகும்' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

**நீதி : இறைவனுக்கு இணை வைப்பது பெரிய பாவமாகும்.**

**60.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் 'தோழர்களே! நீங்கள் கோபம் கொள்ள வேண்டாம். நிச்சயமாக கோபம் ஷைத்தானுடைய செயலாகும். ஷைத்தானை நெருப்பால் படைக்கப்பட்டு இருக்கின்றது. நெருப்பை தண்ணீர் கொண்டு அணைத்துவிட முடியும். ஆகவே உங்களுக்கு கோபம் வந்தால் தண்ணீரில் குளித்து விடுங்கள்; அல்லது ஒளு செய்து கொள்ளுங்கள், உங்களை விட்டும் கோபம் போய்விடும்' என்று சொன்னார்கள்.

**நீதி : கோபத்தைத் தவிர்க்க வேண்டும்.**

**61.** பெருமானார் (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் ஒரு பயணத்தின்போது சமையல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்போது தோழர்கள் அனைவரும் சமையல் வேலைகளை ஆளுக்கொன்றாக பகிர்ந்துக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் தமது பங்கிற்காக காட்டிற்குச் சென்று விறகு கொண்டு வரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். தோழர்கள் பெருமானாரைத் தடுத்தபோது, 'உங்களைவிட உயர்ந்தவனாக இருக்க நான் விரும்பவில்லை. பிறரைவிட தன்னை பெருமையாக நினைப்பவனை இறைவன் என்றும் விரும்புவதில்லை' என்று கூறினார்கள்.



**நீதி : தற்பெருமையோடு இருப்பவனை இறைவன் விரும்ப மாட்டான்.**

**62.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஆறு என்று சொன்னார்கள். அவை யாவை என்று கேட்கப்பட்ட போது பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் : 1. நீங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால் ஸலாம் சொல்ல வேண்டும். 2. உங்களை ஒருவர் விருந்துக்கு அழைத்தால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். 3. உங்களிடம் ஒருவர் உபதேசம் கேட்டால் அவருக்கு உபதேசம் செய்ய வேண்டும். 4. ஒருவர் தும்மும் போது அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னால் அதை கேட்டவர் யர்ஹமகல்லாஹ் என்று கூற வேண்டும். 5. ஒருவர் நோயாளியாக இருந்தால் அவரை சுகம் விசாரித்து ஆறுதல் கூறிவர வேண்டும். 6. ஒருவர் இறந்து விட்டால் மையித்துடன் அடக்கும் இடத்திற்குச் சென்று அவருக்காக துஆச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்.

**நீதி : நற்காரியங்கள் அனைத்தும் வணக்கங்களே!**

**63.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களோடு பள்ளியில் அமர்ந்திருந்த போது அவர்களை நோக்கி இன்று உங்களில் நோன்பு வைத்திருப்பவர் யார்? என்று கேட்டார்கள். உடனே அபூபக்கர் (ரலி) அவர்கள் எழுந்து, 'இன்று நான் நோன்பு வைத்துள்ளேன்' என்றார்கள். இன்று உங்களில் ஏழைக்கு உணவளித்தவர் யார்? என பெருமானார் கேட்க, உடனே அபூபக்கர் (ரலி) அவர்கள் 'இன்று நான் ஏழைகளுக்கு உணவளித்தேன்' என்றார்கள். இன்று உங்களில் நோயாளியை சந்தித்து ஆறுதல் கூறியது யார்? எனக் கேட்க, அதற்கும் அபூபக்கர் (ரலி) அவர்களே எழுந்து 'இன்று நான் நோயாளியைச் சந்தித்து ஆறுதல் கூறினேன்' என்றார்கள். இதைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள் 'சுவர்க்க

வாசிகளிடமே மேற்கூறிய நற்பண்புகள் அனைத்தும் குடி கொண்டிருக்கும்' என்று கூறினார்கள்.

**நீதி : நல்லோர்கள் நற்செயல்களில் ஈடுபடுவதை மகிழ்வெனக் கொள்வார்கள்.**

**64.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம், "தோழர்களே, நீங்கள் அனைவரும் நிர்வாகிகளே, உங்கள் ஒவ்வொருவரிடமும் அவரவர் பொறுப்புகளைப் பற்றி கேட்கப்படும். தலைவனிடம் அவன் தலைமையின் கீழ் உள்ள பொறுப்புகளைப் பற்றி கேட்கப்படும். ஒவ்வொரு ஆண் மகனிடமும் அவனது பொறுப்பிலுள்ள மனைவி மக்களைப் பற்றிக் கேட்கப்படும். ஒவ்வொரு பெண்ணிடமும் அவளது கணவனின் வீட்டில் அவள் செய்ய வேண்டிய பொறுப்புகளைப் பற்றிக் கேட்கப்படும். இதுபோல் நீங்கள் அனைவரும் ஏதாவது ஒரு வகையில் பொறுப்புடையவர்களாக இருக்கிறீர்கள். அப்பொறுப்புகளைப் பற்றி உங்களிடம் கேட்கப்படும். அதற்கு நீங்கள் கட்டாயம் பதில் சொல்லியே ஆக வேண்டும்" என்று சொன்னார்கள்.

**நீதி : தனது பொறுப்புகளை செவ்வனே செய்ய வேண்டும்.**

**65.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தமது தோழர்களைப் பார்த்து "நீங்கள் தப்பெண்ணம் குறித்து ஜாக்கிரதையாக இருங்கள். ஏனென்றால் நிச்சயமாக தப்பெண்ணம் கொள்வது பெரும் கெட்ட பழக்கமாகும். நீங்கள் மற்றவர்களின் குறைகளை அலசி ஆராய்ந்து நோக்கவோ கூர்ந்து பார்க்கவோ கூடாது, பொறாமைக் கொள்ளக் கூடாது, கோபப்படக் கூடாது, பிளவு ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. இறைவனின் அடியார்களாகிய நீங்கள் அனைவரும் சகோதரர்களாகவே நடந்து கொள்ளுங்கள்" என்று உபதேசம் செய்தார்கள்.

**நீதி : இறை அடியார்கள் அனைவரும் சகோதரர்களே.**



**66.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் தோழர் ஒருவர் வந்து 'நாயகமே! எனக்கு ஏதாவது உபதேசம் செய்யுங்கள்' என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் 'நீர் ஏதாவது காரியம் செய்ய வேண்டுமென்றால் அக்காரியம் செய்வதற்கு முன்னால் அதன் பலாபலன்களை குறித்து நன்றாக சிந்தனை செய்ய வேண்டும். சிந்தித்து நல்லதென்று பட்டால் அதை செய்யுங்கள். நல்லதல்ல என்று தென்பட்டால் அதை செய்யாதீர்கள். யோசனையின்றி ஒரு காரியமும் செய்யக்கூடாது' என்று உபதேசம் செய்தார்கள்.

**நீதி : சிந்தித்து செயல்பட வேண்டும்.**

**67.** பெருமானார் (ஸல்) அவர்கள் 'இரு விஷயங்கள் ஒருவனிடத்தில் இருந்தால் அவனை இறைவன் நன்றியுள்ளவன், பொறுமையாளன் என்று ஏற்றுக் கொள்வான். அவ்விரு விஷயங்களும் அவனிடத்தில் இல்லை என்றால் அவனை நன்றியுள்ளவன், பொறுமையாளன் என்று இறைவன் ஏற்றுக் கொள்ள மாட்டான்' என்று சொன்னார்கள். அவ்விரு விஷயங்களும் என்ன என்று தோழர்கள் கேட்க 'மார்க்கக் காரியங்களில் தன்னைவிட மேலானவர்களைப் பார்த்து அவர்களைப் பின் தொடர்பவனையும், பொருள் சேர்க்கும் விஷயத்தில் தன்னைவிட கீழானவர்களைப் பார்த்து அவர்களைவிட தமக்கு அதிகமாக கொடுத்துள்ள இறைவனைப் புகழ்வனையும் நன்றியுள்ளவன், பொறுமையாளன் என்று இறைவன் ஏற்றுக் கொள்கின்றான். மார்க்கக் காரியங்களில் தன்னைவிட கீழ் உள்ளவர்களைப் பின் தொடர்பவனையும், பொருள் சேர்ப்பதில் தன்னைவிட மேலானவர்களைப் பார்த்து அதைப் போல நமக்கு இறைவன் கொடுக்கவில்லையே என்று கை சேதப்படுபவனையும் நன்றியுள்ளவன், பொறுமையாளன் என்று இறைவன் ஏற்றுக் கொள்வதில்லை" என்று விளக்கம் தந்தார்கள்.

**நீதி : இறைவன் நமக்கு கொடுத்துள்ளவைகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.**

**68.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு பிரசங்கத்தின் போது சொன்னார்கள், "மானிடனே! ஐந்து நிலைகளுக்கு முன் ஐந்து நிலைகளை கிடைத்தற்கரிய நேரங்களாக பயன்படுத்திக் கொள். 1. மரண நிலைக்குமுன் உயிருள்ள நிலையைப் பயன்படுத்திக் கொள். 2. நோய்களுக்கு முன் ஆரோக்கிய நிலையை பயன்படுத்திக் கொள். 3. வேலைகளில் ஈடுபடுவதற்காக முன் ஓய்வான நேரத்தை பயன்படுத்திக் கொள். 4. வயோதிகம் ஏற்படுவதற்கு முன் வாலிப நிலையைப் பயன்படுத்திக் கொள். 5. ஏழ்மைக்கு முன் செல்வ நிலையை பயன்படுத்திக் கொள். இந்த ஐந்து நிலைகளையும் கிடைத்தற்கரிய நேரங்களாக ஏற்று அதில் நற்காரியங்களில் ஈடுபட வேண்டும்.

**நீதி : காலத்தை வீணாக்காதே.**

**69.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு ஒரு சம்பவத்தை சொல்லிக் காண்பித்தார்கள். ஒரு மனிதர் ஒரு வழியாக சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு மரக்கிளை ஒடிந்து விழுந்திருந்தது. அக்கிளை மனிதர்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்தது. அதை பார்த்த அவர், "அல்லாஹ்வின் மீது ஆணையாக மனிதர்களுக்கு இடையூறு தரக்கூடிய இம்மரக்கிளையை நான் இங்கிருந்து அப்புறப்படுத்துவேன்" என்று கூறினார். இவ்வாறு கூறியதின் காரணமாக அவர் இறந்த பிறகு சுவர்க்கத்தில் பிரவேசிப்பார் என்று சொன்னார்கள்.

**நீதி : வழியில் காணும் இடையூறுகளை நீக்கிவிட வேண்டும்.**

**70.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு மனிதரிடம் சொன்னார்கள். 'நீ புறம் பேசுவதை விட்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால் அது எல்லாப் பாவங்களிலும் கடினமானதாகும். ஒருவன் ஏதாவது பாவத்தை செய்து விட்டு மனம் வருந்தி இறைவனிடம் பாவமன்னிப்பு கோரினால் இறைவன் அவனுக்கு பாவமன்னிப்பு கொடுக்கக் கூடும்.



ஆனால் புறம் பேசியவன் இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் அவன் மன்னிக்க மாட்டான். அவன் யாரைக் குறித்து புறம் பேசினானோ அவன் மன்னித்தாலன்றி இறைவன் அக்குற்றத்தை மன்னிக்க மாட்டான்.

**நீதி : புறம் பேசுவது தவறாகும்.**

**71.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் சொன்னார்கள் : 'உண்மை பேசுவது சுவர்க்க வாசிகளின் செயலாகும். ஆகவே உங்களில் ஒருவர் உண்மை பேசினால் நன்மை செய்தவராக ஆகிவிடுகிறார். நன்மை செய்தால் நம்பிக்கை உடையவராகி விடுகிறார். நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் அனைவரும் சுவர்க்கத்தில் நுழைவார்கள். பொய் பேசுவது நரகவாசிகளின் செயலாகும். ஆகவே உங்களில் ஒருவர் பொய் பேசினால் தீமை செய்தவராக ஆகி விடுகிறார். தீமை செய்தால் நம்பிக்கையற்றவராகி விடுகிறார். நிச்சயமாக நம்பிக்கையற்றவர்கள் அனைவரும் நரகத்தில் நுழைவார்கள்'.

**நீதி : உண்மையே வெல்லும்.**

**72.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் "நீங்கள் வயிறு புடைக்க உண்ணுவதிலும் குடிப்பதிலும் எச்சரிக்கையாக இருங்கள். அவ்வாறு உண்ணுவதும், குடிப்பதும் உடம்புக்கு கெடுதலை விளைவிக்கும், வயிற்று நோயை ஏற்படுத்தும், தொழுவதற்கு சோம்பலை உண்டாக்கும். அது போல் வீண் செலவுகள் செய்வதிலும் எச்சரிக்கையாக இருங்கள். அது அழிவை ஏற்படுத்தும், வறுமையை உண்டாக்கும். ஆகவே இவை இரண்டும் மனிதனின் வாழ்க்கை வெற்றிக்கு இடையூறாகவே இருக்கும்" என்று கூறினார்கள்.

**நீதி : அளவுக்கு அதிகமாக உண்பது ஆபத்தை விளைவிக்கும்.**

**73.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து "யாரசூலல்லாஹ்! வேலைக்காரன் செய்த தவற்றை நாம் எத்தனை தடவை மன்னிக்க வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் பதில் ஏதும் சொல்லாமல் வாய் மூடி மௌனமாக இருந்தார்கள். அவர் அதே கேள்வியை திரும்பவும் கேட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பொழுதும் ஒன்றும் சொல்லவில்லை. அவர் மூன்றாம் முறையும் அதே கேள்வியை கேட்டார். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் வேலைக்காரன் செய்த தவற்றை ஒரு நாளைக்கு எழுபது தடவை மன்னித்தாலும் அதுவும் குறைவே" என்றார்கள்.

**நீதி : வேலைக்காரன் செய்யும் சின்னஞ்சிறு தவறுகளை மன்னித்துவிட வேண்டும்.**

**74.** "பெருமானார் (ஸல்) அவர்களிடம் நான் பத்து வருடம் வேலை செய்து இருக்கிறேன். அவர்கள் என்னை வெறுப்புடன் 'சீ' என்ற வார்த்தையைக் கூட சொன்னது கிடையாது. நான் செய்யத் தவறிய ஒரு செயலை ஏன் செய்யவில்லை என்றுகூட கேட்டது கிடையாது. அவ்வேலையை செய்து இருக்கக் கூடாதா என்றும் அவர்கள் கேட்டதில்லை" என்று நாயகத் தோழர் அனஸ் (ரலி) அவர்கள் சொன்னார்கள்.

**நீதி : வேலைக்காரர்களிடம் அன்பாக இருக்க வேண்டும்.**

**75.** பெருமானார் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் உட்கார்ந்து இருந்த போது எண்ணையிட்டு சீவாமல் தலைவிரிகோலமாக ஒருவர் வந்தார். அவரைப் பார்த்த பெருமானார் (ஸல்) அவர்கள் வெறுப்புடன் முகம் சுளித்தார்கள். இதை விளங்கிக் கொண்ட அந்த மனிதர் உடனே வீட்டிற்குச் சென்று தமது முடிக்கு எண்ணையிட்டு தலை சீவிக் கொண்டு வந்தார். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் அவரைப் பார்த்து "இதுதான் நல்ல செயலாகும், தலைவிரிகோலமாக இருப்பது ஷைத்தானுடைய செயல், ஷைத்தானை நாம் பின்பற்றக் கூடாது" என்று சொன்னார்கள்.



**நீதி : தலைக்கு எண்ணையிட்டு அழகாக வைத்துக் கொள்ள வேண்டும்.**

**76.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு வழியாக சென்று கொண்டிருக்கும் போது ஒரு சிறுவனைப் பார்த்தார்கள். அவன் தலையில் ஒரு பாகத்தில் உள்ள முடியை நீக்கிவிட்டு மறு பாகத்தில் முடியை வளர்த்து இருந்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் அவனை அருகில் அழைத்து, 'சிறுவனே! உன் தலையில் உள்ள எல்லா முடியையும் எடுத்து விடு (மொட்டை அடித்து விடு) அல்லது வளர்த்துக் கொள். இப்படி அரைகுறையாக தலையில் முடி வைப்பது உகந்தது அல்ல" என்று கூறினார்கள்.

**நீதி : தலை முடியை அரைகுறையாக வெட்டிக் கொள்ளக் கூடாது.**

**77.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் ஒரு சஹாபியின் முகத்தில் உள்ள சிறிய தாடியைப் பார்த்து சிரித்தார்கள். இதைப் பார்த்த அந்த சஹாபி வீட்டிற்கு போய் தம் தாடியை எடுத்துவிட்டார். மறுநாள் அந்த சஹாபி பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னால் தோன்றி ஸலாம் கூறினார். அவரைப் பார்த்த பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களின் முகத்தை திருப்பிக் கொண்டார்கள். உடனே அந்த சஹாபி, நாயகமே! நீங்கள் நேற்று எனது தாடியை பார்த்து சிரித்தீர்கள். அதனால் தான் நான் தாடியை எடுத்து விட்டேன் என்று கூறினார். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் "நான் தங்களின் தாடியைப் பார்த்து சிரிக்க வில்லை, தங்களின் தாடியில் ஹூருல்ஈன் பெண்கள் (சுவர்க்கத்து மங்கைகள்) ஊஞ்சலாடிக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்துத்தான் சிரித்தேன்" என்று கூறினார்கள்.

**நீதி : முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் தாடி வளர்ப்பது அவசியம்.**

**78.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் "தோழர்களே! எவர் தமது ஆடையை பெருமைக்காக கணுக்காலுக்கு கீழே தொங்க விடுகின்றாரோ அவரை அல்லாஹ் ஏறிட்டும் பார்க்க மாட்டான்" என்று சொன்னார்கள். அப்போது அபூபக்கர் (ரலி) அவர்கள் நாயகமே! என் கீழ் ஆடை நான் அறியாது நழுவி எனது கணுக்காலுக்கு கீழாக இறங்கி விடுகிறது. எனவே நான் இனிமேல் அவ்விதம் ஆகாது கவனித்துக் கொள்ளவா? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "பெருமைக்காக செய்பவர்களில் நீரில்லை" என்று கூறினார்கள்.

**நீதி : ஆடைகளை கணுக்காலுக்கு கீழே உடுத்தக் கூடாது.**

**79.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் பள்ளிவாசலில் உட்கார்ந்து இருந்த போது ஒரு மனிதர் அங்கு வந்தார். அவரும் அக்கூட்டத்தில் உட்கார விரும்பினார். அவரைக் கண்டதும் பெருமானார் (ஸல்) அவர்கள் கொஞ்சம் நகர்ந்து அவருக்கு இடம் கொடுத்தார்கள். உடனே அம்மனிதர், 'நாயகமே! இங்கு எனக்கு போதுமான இடம் இருக்கிறதே, நீங்கள் ஏன் நெருங்கி உட்கார வேண்டும்' என்று கேட்டார். கூட்டத்தில் வந்து உட்கார விரும்பும் மனிதருக்காக கொஞ்சம் நகர்ந்து இடம் விடுவது ஒவ்வொருவரின் மீதும் அவசியமாகும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

**நீதி : இடம் இல்லாதவருக்கு இடம் கொடுத்து உதவ வேண்டும்.**

**80.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் சிலர் வந்து "நாயகமே! நாம் வயிறு நிறைய உண்ணுகிறோம். ஆனால் பசி தீருவதில்லையே, காரணம் யாது" என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் சேர்ந்து உண்ணாமல் தனியாக உண்ணுகிறீர்களா என்று கேட்க அவர்கள் ஆம் என்று



சொன்னார்கள். "நீங்கள் உண்ணும் போது ஒன்றாக சேர்ந்து உண்ணுங்கள். உண்ணுவதற்கு முன் இறைவனுடைய பெயரை (பிஸ்மில்லாஹ்)ச் சொல்லி உண்ணுங்கள். அவ்வாறு உண்ணும் போது உங்களுடைய உணவில் இறைவன் பரக்கத்தை (அபிவிருத்தி) தருகின்றான்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

**நீதி : கூட்டாக உண்ணுங்கள். இறைநாமத்தை உச்சரித்து உண்ணுங்கள்.**

**81.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் "என்னுடைய உம்மத்துகளில் ஒதுக்கப்பட்டவர்களைத் தவிர மற்ற எல்லோரும் சுவர்க்கத்தில் புகுந்து விடுவார்கள்" என்று சொன்னார்கள். உடனே தோழர்கள் நாயகமே! ஒதுக்கப்பட்டவர்கள் என்றால் யார்? எனக் கேட்க அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் "யார் என்னுடைய சுன்னத்தை (வழி முறைகளை) பேணி நடக்கவில்லையோ அவர்கள் தாம் ஒதுக்கப்பட்டவர்களாகும்" என்று கூறினார்கள்.

**நீதி : பெருமானாரின் வழி முறைகளை பேணி நடத்தல் வேண்டும்.**

**82.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் முஸ்லிம்களில் மிகச் சிறந்தவர்கள் யார்? என்று கேட்கப்பட்டது. அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது நாவாலோ கைகளாலோ மற்றவர்களுக்கு தீங்கிழைக்காமல் யார் இருக்கிறார்களோ அவர்களே சிறந்த முஸ்லிம்கள். இன்னும் யார் மற்றவர்களுக்கு ஸலாம் சொல்லுகிறார்களோ அவரும், யார் பசித்தவருக்கு உணவு கொடுத்து உதவுகிறாரோ அவரும் (அறிந்தவர்களாக இருந்தாலும், அறியாதவர்களாக இருந்தாலும் சரி) மனிதர்களில் மிகச் சிறந்தவர்களாகும் என்றுற சொன்னார்கள்.

**நீதி : பிறருக்கு தீங்கு செய்யாமல் இருப்பவர்களே சிறந்த முஸ்லிம்கள்.**

**83.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு விருந்தினரை வீட்டிற்கு அழைத்து வந்து உணவு கொடுத்து இரவில் தூங்குவதற்காக இடமும் கொடுத்து போர்த்திக் கொள்வதற்காகத் தமது போர்வையையும் கொடுத்து உபசரித்தார்கள். இரவில் அவன் வயிற்று கோளாறின் காரணத்தினால் போர்வையிலும் படுக்கையிலும் மலம் கழித்து அசிங்கப்படுத்தி விட்டு காலையில் யாருக்கும் தெரியாமல் எழுந்து ஓடி விட்டான். போகும்போது அவனுடைய வாளை எடுத்துச் செல்ல மறந்து விட்டான். அதை எடுத்துச் செல்லலாம் என்று எண்ணி திரும்பி வந்து பார்க்கும் போது அங்கு அவனால் அசுத்தப்படுத்தப்பட்ட போர்வையை பெருமானார் (ஸல்) அவர்கள் தமது திருக்கரங்களாலேயே கழுவி சுத்தம் செய்த கொண்டிருந்தார்கள். இந்நிகழ்ச்சியை கண்டதும் அவன் தவற்றை உணர்ந்து திருந்தி பெருமானாரிடம் மன்னிப்பை வேண்டினான்.

**நீதி : அடைக்கலம் தந்தோரை அவமதித்தல் கூடாது.**

**84.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் இரவு நின்ற வண்ணம் வெகுநேரம் தொழுது கொண்டிருந்தார்கள். அதனால் அவர்களின் இரண்டு கால்களும் வீங்கி விட்டன. அதைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்களின் துணைவியார் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் "நாயகமே! இறைவன் உங்களுடைய முன் பின் செய்த பாவங்கள் அனைத்தையும் மன்னித்து உங்களை இறை தூதராக இறை நேசராக ஏற்றுக் கொண்டானே அப்படி இருக்க ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு வணக்கம் புரிய வேண்டும்?" என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "நான் இறைவனுக்கு நன்றி செலுத்தும் நல்லடியானாக இருக்க வேண்டாமா?" என்று சொன்னார்கள்.

**நீதி : இறைவன் நமக்கு கொடுத்த நிஃமத்துகளுக்கு நன்றி செலுத்த வேண்டும்.**



**85.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களைப் பார்த்து சொன்னார்கள், "தோழர்களே நீங்கள் மற்றவரை நற்செயல்கள் செய்யும்படி தூண்டுங்கள். நற்செயல்கள் செய்பவருக்கு எவ்வளவு கூலி கிடைக்குமோ அவ்வளவு கூலி நற்செயல்கள் செய்ய தூண்டியவருக்கும் உண்டு. அதுபோல் மற்றவர்களை தீயச் செயல்கள் செய்யும்படி தூண்டாதீர்கள். தீயச் செயல்கள் செய்பவருக்கு எவ்வளவு தண்டனையோ அந்த அளவு தண்டனை தீயச் செயல்கள் செய்யத் தூண்டியவருக்கும் உண்டு. அதில் கொஞ்சமும் குறையாது".

**நீதி : நன்மையை ஏவி தீமையைத் தடுக்க வேண்டும்.**

**86.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தொழுகைக்காக ஒளுச் செய்து கொண்டிருந்தார்கள். ஒளுச் செய்யும் போது அவர்களின் கைகளிலிருந்தும் முகத்திலிருந்தும் வடியும் தண்ணீரை பெருமானாரின் தோழர்கள் தங்களது கரங்களால் ஏந்தி தங்களது உடம்பிலும் முகத்திலும் தடவிக் கொண்டார்கள். இதைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம் நீங்கள் இவ்வாறு செய்வதின் காரணம் யாது? என்று கேட்க அதற்கு தோழர்கள் நாயகமே! உங்கள் மீதுள்ள அன்பின் காரணத்தால் நாங்கள் இவ்வாறு செய்கிறோம் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "யார் உண்மையே பேசி எனது வழி முறைகளை (சுன்னத்) பேணி நடக்கின்றார்களோ அவர்களை என் மீது அன்பு காட்டியவராவார்" என்று சொன்னார்கள்.

**நீதி : சுன்னத்தை பேணுதல் நாயகத்தின் மீதுள்ள அன்பைக் காட்டுகிறது.**

**87.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் பிரசங்கம் செய்து கொண்டிருந்த போது, "தனது உள்ளத்தில் சிறிதளவு தற்பெருமை உள்ளவன் சுவர்க்கத்தில் நுழையமாட்டான்" என்று சொன்னார்கள். உடனே அங்கிருந்த ஒரு மனிதர் எழுந்து 'நாயகமே! தனது உடைகள் அழகாக இருக்க வேண்டும். தனது

பாதணிகள் அழகாக இருக்க வேண்டும் என்று ஒருவன் விரும்புவது தற்பெருமையாகுமா?'' என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வாறு எண்ணுவது தற்பெருமையாகாது. மனிதர்கள் அழகாக இருப்பதையே இறைவன் விரும்புகிறான். மற்றவரை மதியாமல் இருப்பதும், நியாயத்தை மறுப்பதும் தற்பெருமையாகும் என்று சொன்னார்கள்.

**நீதி : தற்பெருமை இழிவைத் தரும்.**

**88.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் ஒரு மண்டியின் பக்கமாக சென்று கொண்டிருந்தார்கள். அப்போது, அங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருளினுள் தங்கள் கையை நுழைத்துப் பார்த்தார்கள். அவர்களுடைய விரல்களில் ஈரம் பட்டது. உடனே வியாபாரியிடம் இது என்ன? என்று கேட்டார்கள். "நாயகமே! உணவு பொருள்களின் மீது மழைத் தண்ணீர் விழுந்து விட்டது'' என்று பதில் சொன்னார். அப்படி என்றால் அதை மனிதர்களின் பார்வையில் படும்படி வைத்து விற்கக் கூடாதா? என்று கேட்டுவிட்டு யார் மற்றவர்களை ஏமாற்றி வியாபாரம் செய்கின்றார்களோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்லர் என்று கூறினார்கள்.

**நீதி : ஏமாற்றி வியாபாரம் செய்வது கூடாது.**

**89.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் போரில் ஷஹீதாகி (உயிர் துறந்து) விட்டார்கள் என வதந்தி பரவியது. இந்தச் செய்தி மதீனா நகர் முழுவதையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதைக் கேள்விப்பட்ட ஒரு பெண்மணி அண்ணலாரை பார்ப்பதற்காக போர்க்களம் நோக்கி ஓடினார். வழியில் அப்பெண்மணியின் தந்தையும், மகனும், அண்ணனும், கணவனும் ஆகிய நால்வரும் போரில் வீர மரணம் எய்தி விட்டதாக செய்திகள் வந்தன. ஆனால் அப்பெண்மணி அச்செய்திகளை எல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல்



'கருணை நபிக்கு என்னவானது?' என கண்ணீர் சிந்தியவாறு ஓடினார். போர்க்களம் சென்று அண்ணலார் உயிரோடு இருக்கிறார்கள் என்று அறிந்ததும்தான் அப்பெண்மணி நிம்மதியடைந்தார்.

**நீதி : பெருமானாரை நம் உயிரினும் மேலாக நேசிக்க வேண்டும்.**

**90.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தமது தோழர்களிடம் முற்காலத்தில் பனீ இஸ்ராயீல் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிரம் மாதங்கள் விழித்து இருந்து வணக்கம் புரிந்தார்கள் என்று சொல்லிக் காட்டிய போது ஸஹாபாக்கள் "நாயகமே! இறைவன் நம்மை அறுபது எழுபது வயதுதானே இவ்வுலகில் வாழச் செய்துள்ளான். இந்த சொற்ப வயதில் நாம் எவ்வாறு ஆயிரம் மாதங்கள் நின்று வணங்க முடியும். அந்த பாக்கியம் நமக்கு கிடைக்காதா?'' என்று வேதனைப்பட்டார்கள். உடனே நாயகம் (ஸல்) அவர்கள் 'நீங்கள் ரமளான் மாதத்தில் உள்ள லைலத்துல் கத்ரு இரவில் விழித்து இருந்து வணக்கம் புரிவது ஆயிரம் மாதங்கள் வணங்கியதைவிடச் சிறந்தது' என்று கூறினார்கள்.

**நீதி : லைலத்துல் கத்ரு இரவில் விழித்திருந்து வணக்கம் புரிய வேண்டும்.**

**91.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு நாள் ஒரு வயது முதிர்ந்த பெண்மணியொருவர் திராட்சைப் பழக்கொத்து ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்து அதை புசிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொண்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் அவற்றை புசிக்கத் தொடங்கினார்கள். வழக்கத்திற்கு மாறாகத் தோழர்களில் எவருக்கும் ஒரு பழம் கூட கொடுக்காமல் பழங்கள் முழுவதையும் பெருமானாரே புசித்து விட்டதைக் கண்டு தோழர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. பழத்தைக் கொடுத்த பெண்மணியோ பழங்கள் முழுவதையும் பெருமானாரே புசித்து விட்டதைக் கண்டு

மகிழ்வடைந்து நன்றி கூறிவிட்டு சென்றுவிட்டார். உடனே தோழர்கள் பெருமானாரை நோக்கி, "வழக்கப்படி எங்களுக்கெல்லாம் கொடுக்காமல் எல்லாப் பழங்களையும் தாங்களே புசித்து விட்டதைக் கண்டு ஆச்சரியப்படுகின்றோம்" என்றனர். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் புன்முறுவலோடு பதிலளித்தார்கள். அந்த அம்மையார் அன்போடு அளித்த பழங்கள் அனைத்தும் புளிப்பாக இருந்தன. உங்களில் யாருக்கேனும் அதை நான் கொடுத்தால் பழம் புளிக்கின்றது என்று சொல்லி இருப்பீர்கள். அதைக் கண்டு அந்த அம்மையார் வருத்தப்பட்டிருப்பார்.

ஆகவே அன்போடு நம்மைத் தேடி வந்து பரிசளித்த அந்த அம்மையாரின் அன்புள்ளத்தை நோகச் செய்ய நான் விரும்பவில்லை. அதனால்தான் பழங்கள் முழுவதையும் நானே புசித்துவிட்டேன் என்று விளக்கம் தந்தார்கள்.

**நீதி : மற்றவர்களின் மனதை நோகச் செய்யக் கூடாது.**

**92.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து "அல்லாஹ்வின் தூதரே! நான் எதனைச் செய்து வந்தால் என்னை அல்லாஹ்வும் அவனுடைய அடியார்களாகிய மனிதர்களும் நேசிப்பார்களோ அத்தகைய நல்லதொரு செய்கையை எனக்கு அறிவித்துக் கொடுங்கள்" என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் "உலகாசையை நீர் விட்டு விடுவீராக; அப்போது அல்லாஹ் உம்மை நேசிப்பான். மற்ற மனிதர்களிடம் எதையும் எதிர்பார்ப்பதை நீர் விட்டு விடுவீராக; அப்போது மனிதர்கள் உம்மை நேசிப்பார்கள்" என்று சொன்னார்கள்.

**நீதி : உலகாசையை வெறுக்க வேண்டும்.**

**93.** பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி ஒரு தோழர் நாயகமே எந்த செயல்களைச் செய்தால், மறுமை நாளில் வெற்றி பெறலாம் என்று கேட்டார். அதற்குப் பெருமானார்



(ஸல்) அவர்கள் தோழரே, நீர் தீய சொற்கள் பேசுவதை விட்டும் உம்முடைய நாவை அடக்கிக் கொள்வீராக, நீர் வீட்டில் தனித்திருந்து உம்முடைய பாவங்களை எண்ணி அழுத வண்ணம் இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுவீராக." இந்த இரண்டு செயல்களும் உம்மிடம் இருப்பின் நீர் மறுமை நாளில் வெற்றி பெறலாம் என்று விடையளித்தார்கள்.

**நீதி : தீயச் சொற்களை விட்டும் நாவை பாதுகாத்துக் கொள்.**

**94.** ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்களைச் சந்திக்க சில யூதர்கள் வந்தார்கள். அப்போது அவர்கள் (நபியவர்களை நோக்கி) அஸ்ஸாமு அலைக்கும் (உமக்கு மரணம் சம்பவிக்கட்டும்) என கூறினார்கள். (அஸ்ஸலாமு என்று கூறாமல் வேண்டுமேன்றே இவ்வாறு கூறினர்.) அதற்கு நபி (ஸல்) அவர்கள் "வ அலைக்கும்" என்று பதில் கூறினார்கள். அங்கு அமர்ந்திருந்த ஆயிஷா (ரலி) அவர்கள் கோபமாக, "உங்கள் மீது மரணம் உண்டாகட்டும். அல்லாஹ்வின் சாபமும் கோபமும் உண்டாகட்டும்" என்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் "பொறு ஆயிஷா! மிருதுவாக நடந்து கொள். கோபத்தையும் வெறுப்பையும் விட்டுவிடு" என்று கூறினார்கள். "யாரசூலல்லாஹ் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நீங்கள் செவியுறவில்லையா?" என்று ஆயிஷா (ரலி) கேட்டதற்கு "நான் அவர்களுக்கு கூறிய பதிலை நீ செவியுறவில்லையா! அவர்கள் சொன்ன வார்த்தையை அவர்கள் மீது திருப்பிவிட்டேன். எனது துஆ ஏற்றுக் கொள்ளப்படும். அவர்களின் வார்த்தை ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது" என்று கூறினார்கள்.

**நீதி : மென்மை மேன்மை தரும்.**

**95.** பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து நாயகமே! ஒரே மூச்சில் தண்ணீர் குடிப்பதால் தாகம் தீர்வதில்லை என்றும், ஆகவே நாம் குடிக்கும் பாத்திரத்தில் மூச்சு விட்டு குடிக்கலாமா என்றும் கேட்டார். அதற்கு

பெருமானார் (ஸல்) அவர்கள் உம் வாயை விட்டும் சற்று பாத்திரத்தை நகர்த்திக் கொண்டு பின்னர் மூச்சு விடவும் என்று கூறினார்கள். உடனே அவர் தண்ணீரில் தூசிகள் இருக்க காண்கின்றேன். அப்போதாவது அதை வாயால் ஊதி ஒதுக்கி விடலாமா? என்று வினவினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்விதமாயின் அதில் சிறிதைக் கீழே ஊற்றுவதால் அத்தூசி போய்விடும் என்று விளக்கினார்கள்.

**நீதி : ஒரே மூச்சில் தண்ணீரைக் குடிப்பதையும், குடி பானத்தை ஊதிக் குடிப்பதையும் தவிர்த்தல் வேண்டும்.**

**96.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தோழர்களிடம் தோழர்களே! நான் எனது விண்வெளிப் பயணத்தின் போது நரகினைப் பார்த்தேன். அங்கு பெரும்பாலோர் ஏழைகளாக இருக்கக் கண்டேன். ஆகவே நீங்கள் அக்கூட்டத்தில் சேர்ந்து விடாதீர்கள் என்று சொன்னார்கள். உடனே நாயகத் தோழர்கள் "அல்லாஹ்வின் தூதரே! இவ்வுலகில் பொருட்செல்வம் இல்லாதிருந்த ஏழைகளையா தாங்கள் நரகில் கண்டீர்கள்" என்று கேட்க அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் 'இல்லை மார்க்க அறிவு இல்லாதிருந்த ஏழைகளையே நரகில் கண்டேன்' என்று விடை தந்தார்கள்.

**நீதி : மார்க்கக் கல்வி கற்றுக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும்.**

**97.** பெருமானார் (ஸல்) அவர்களை ஒருவர் பார்க்க வந்தபோது, 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூறினார். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்குரிய பதிலை கூறி விட்டு நீர் இவ்வாறு சொன்னதால் உமக்கு பத்து நன்மைகள் கிடைக்கும் என கூறினார்கள். இன்னொருவர் பெருமானாரைச் சந்திக்கும்போது 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி' என்று சொன்னார். பெருமானார் (ஸல்)



அதற்குரிய பதிலைச் சொல்லிவிட்டு நீர் இவ்வாறு 'ரஹ்மத்துல்லாஹி' என்று சேர்த்து சொன்னதால் உமக்கு இருபது நன்மைகள் கிடைக்கும் எனக் கூறினார்கள். இன்னொருவர் பெருமானாரைப் பார்த்தபோது 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு' என்று சொன்னார். பெருமானார் (ஸல்) அவர்கள் அதற்குரிய பதிலை கூறிவிட்டு நீர் 'ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு' என்று சேர்த்து சொன்னதால் உமக்கு முப்பது நன்மைகள் கிடைக்கும் என்று சொன்னார்கள்.

**நீதி : ஸலாம் சொல்லும் போது அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு என்று அழகாகச் சொல்ல வேண்டும்.**

**98.** பெருமானாரிடம் ஒருவர் வந்து அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் எனக்கு சில உபதேசங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி, "நீர் உம்முடைய தொழுகையில் ஈடுபடும்போது இதுவே கடைசி நேரத் தொழுகை என்ற நினைப்புடன் தொழுவீராக" என்றும், இறைவனுக்கு பிடிக்காத செயல்கள் எதையும் செய்யாமல் இருப்பீராக என்றும் மற்ற மனிதர்களிடம் உமது தேவையை எதிர்பார்ப்பதை விட்டும் விலகிக் கொள்வீராக என்றும் அவருக்கு உபதேசம் செய்தார்கள்.

**நீதி : பெரியவர்களின் உபதேசங்களைக் கேட்டு அதன்படி நட.**

**99.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தங்களது தோழர்களிடம் பேசிக் கொண்டிருக்கும்போது அங்கு உடல் வலிமையுள்ள ஓர் இளைஞர் வந்தார். அவரைப் பார்த்ததும் நாயகத் தோழர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம்

"நாயகமே! இந்த இளைஞர் தமது உடல் வலிமையை அல்லாஹ்வுக்காக போர் புரிந்து அல்லாஹ்வின் பாதையிலே செலவழித்திருந்தால் எவ்வளவு நன்மையாக இருக்கும்" என்றார்கள். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் "அவ்வாறு சொல்லாதீர்கள். ஒருவர் தம்முடைய குழந்தைகளை வளர்ப்பதற்காக் தமது உழைப்பை செலவிட்டால் அதுவும் இறை பாதையில் செலவிட்டதாகும். தம்முடைய முதுமை அடைந்த பெற்றோருக்காக உழைத்தால் அதுவும் இறை பாதையில் செலவிட்டதாகும். இன்னும் சொந்த வாழ்க்கைக்காக தமது உழைப்பை செலவிட்டால் அதுவும் இறை பாதையில் செலவிட்டதாகும். ஆனால் எவர் பெருமையையும் வீண் பகட்டையும் தேடிச் செல்வாரோ அவர் ஷைத்தானுடைய வழியில் செல்பவரேயாவார்" என்று கூறினார்கள்.

**நீதி : ஷைத்தானைப் பின்பற்றாமல் அல்லாஹ்வின் வழியில் செல்லுங்கள்.**

**100.** பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கடைசி பிரசங்கத்தின் போது தோழர்களே! உங்களுக்கு நான் இரண்டு சொத்துக்களை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அவ்விரண்டையும் பற்றி பிடித்து நடக்கும் காலமெல்லாம் நிச்சயமாக வழி தவற மாட்டீர்கள். ஒன்று அல்லாஹ்வின் வேதமாகிய இறைமறை, இரண்டு என்னுடைய சுன்னத்தாகிய வழிமுறை என்று சொன்னார்கள்.

**நீதி : இறை வேதமும் நபி போதமுமே இரு உலக வாழ்க்கையின் வெற்றிக்கு வழி.**

***